International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 07 Issue: 03 July to September 2025 www.irjtsjournal.org

# பாண்டியநாட்டில் நடுகல் வழிபாடும் நம்பிக்கையும்

**முனைவர்.சி.செல்லப்பாண்டியன்**
உதவிப்பேராசிரியர்
தேவாங்கர் கலைக்கல்லூரி, அருப்புக்கோட்டை.

Dr.C.Sellappandian
*Assistant Professor,*
*Devanga Arts College – Aruppukottai*

**முன்னுரை:**

வழிபாடு என்பது மனிதன் நாடோடியாக உணவுக்காக அலைந்த காலத்திலேயே தொடங்கப்பட்டது. உணவு சேகரிப்பவனாக மட்டுமே இருந்த மனிதன் காட்டு விலங்குகளை வேட்டையாடி உண்டான். அதனால் காட்டு விலங்குகளை வேட்டையாடி உண்டான். அதனால் காட்டு விலங்குகளைக் கண்டு அவனுக்கு பயமில்லாமல் போனது. அதே வேளையில் இடி, மின்னல், தீ ஆகியவை மனிதனைப் பயமுறுத்தின. அதன் விளைவாக இம்மூன்றையும் முதலில் வழிபடத் தொடங்கினர். இதுவே இயற்கை வழிபாட்டு மரபின் தொடக்கம் ஆகும். இயற்கையை வணங்கிய மனிதன் பின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் பாம்பு உள்ளிட்ட உயிரினங்களையும் வழிபடலானான். நாடோடி வாழ்க்கை முடிந்து நிலையான வாழ்க்கைக்கு திரும்பிய பின்பு ஆவி, ஆன்மா, குறித்த நம்பிக்கைகள் தோன்றின. அதனால் மனிதன் இறந்த பின் அவனின் ஆன்மா இப்புவியில் இருக்கும் ஆன்மாவை சந்தோசப்படுத்த வேண்டும் இல்லையெனில் அந்த ஆன்மா தன் குலத்தையேஅழித்துவிடும் என்ற நம்பிக்கை வளர்ந்தது. குறிப்பாக பெருங்கற்கால மக்களிடம்இந்த நம்பிக்கைஇருந்தது. எனவே தான் இறந்தவர்களை தாழிகளில் வைத்துப்புதைக்கும் பழக்கம் இக்காலத்தில் தோன்றியது. பெருங்கற்கால மக்கள் இறந்தவர்களை சவ அடக்கம், தாழி, கல்வட்டம், கல்பதுக்கை உள்ளிட்டமுறைகளில் புதைத்தனர். பெருங்கற்கால மக்கள் உடல்வேறு உயிர்வேறு என்று நம்பினர். உயிர் அழிவற்றது. எனவே இறந்த ஆன்மாவைத் திருப்தியடையச் செய்யவழிபாட்டு முறைகள் தோன்றின அவற்றில் ஒன்று நடுகல் வழிபாட்டு முறையாகும்.

**நடுகல் வழிபாட்டு மரபு:**

இறந்த பின்பு ஆன்மா வாழக்கூடியது என்றநம்பிக்கையினால் ஆன்மா தங்குவதற்கு ஓர் இடம் தேவை என கருதினர்பழங்காலத் தமிழர்கள். இவ்வாறு ஆன்மாவை வழிபடுவதன் மூலம் தம் இனக்குழுபெருகும் என்று நம்பினர். அதோடு சில சடங்குகள் மூலம் ஆன்மாவைமகிழ்ச்சியடையச் செய்யலாம் என்று கருதினர். இதுவே மூத்தோர் வழிபாட்டின்தொடக்கம் எனலாம். திண்டுக்கல் மாவட்டம் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில்அமைந்துள்ள தாண்டிக்குடி, கோரங்கொம்பு கிராமங்களில் காணப்படும் சுமைதாங்கிக் கல் இத்தகைய மூத்தோர் வழிபாட்டு எச்சமாகும். இதுபெருங்கற்காலத்தைச் சேர்ந்தது. பெருங்கற்கால எச்சங்களுக்கு அடுத்த படியாகதமிழர் பண்பாட்டை ஆராய நடுகற்கள் மிக முக்கியமான பங்களிப்பைத்தருகின்றன. இந்த நடுகற்கள் மூலம் மக்களின் நம்பிக்கை, வீரம், சடங்குகள்உள்ளிட்ட பண்பாட்டுக் கூறுகளை அறிய முடிகிறது. நடுகல் வழிபாட்டில் வீரமே அடிப்படைப் பண்பாக உள்ளது. அதிலும் வீரம் காட்டி காதல் செய்தலே அந்நாளில்விரும்பப்பட்டது எனலாம்.

சங்க காலத்தில் மக்கள் சிறு குழந்தைகள் இறந்தால் கூட உடலைப் போர்வாளினால் கீறிய பின்னர் புதைத்தனர் என்று கூறுகிறது புறநானூறு. தமிழர்கள் தம்வாழ்நாளில் வீரத்திற்கு சிறப்பிடம் அளித்து

வந்துள்ளனர்.

**விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்**

**வைக்கும்தன் நாளை எடுத்து**

**என்ற வள்ளுவரின் திருக்குறளின்படி** வீரன் ஒருவன் தன் கடந்த காலநாட்களை எண்ணிப் பார்த்து, அவற்றில் முகத்திலும் மார்பிலும் போரின் போதுவிழுப்புண் ஏற்படாத நாட்கள் பயனற்றது என்று இதன் பொருளாகும்.

சங்க காலத்தில் வீரமரணமடைந்த வீரனுக்கு கல்லெடுத்து வழிபட்டு அதில் பெயர் பொறித்து வைத்தனர் என்பதை மலைபடுகடாம்

**“மற்றவர் செல்லா நல்லிசை பெயரோடு நட்ட கல்”**

கூறுகிறது. பொதுவாக நடுகல் என்பது ஆகோன் பூசலில் வீரத்துடன் சண்டையிட்டு உயிரிழந்த வீரனின் நினைவாக எடுக்கப்பட்ட நினைவுச் சின்னம் ஆகும். எனவே இதனை நினைவுக்கல் என்றும் வீரத்தின் அடையாளமாக நடப்படுவதால் வீரக்கல் என்றும் அழைப்பர். ஆநிரை கவர்தல் ஆநிரை மீட்டல் என்பது முல்லை மற்றும் பாலை நிலங்களில் நடைபெறும் நிகழ்வாகும். வீரர்கள் இரவுப் பொழுதில் ஆநிரைகளைக் கவர்ந்தனர் என்கிறது சங்க இலக்கியங்கள். சங்க காலத்தில் ஆநிரை (பசு) மீட்டலில் இறந்த வீரர்களுக்கே நடுகல் எடுக்கப்பட்டுள்ளது. எனவே நடுகல் வழிபாடு பழங்கால ஆவி வழிபாட்டின் எச்சம் என ஆய்வாளர் பூங்குன்றன் கூறுவது கவனிக்கத்தக்கது.

**நடுகல் எடுத்தல்:**

புதிய நிலப் பகுதியில் மேய்ச்சலுக்காக குடிபெயர்பவர்கள் மற்றும் ஏற்கனவேஅந்த மேய்ச்சல் நிலத்தில் இருந்தவர்களுக்கிடையே மேய்ச்சல் நிலம் தொடர்பானபூசல் ஏற்படுவதுண்டு. அந்த பூசலின் விளைவாக இனக்குழுக்கலுக்கிடையேநடைபெற்ற போரில் உயிர்பலி நிகழ்வதுண்டு அவ்வாறு இறந்த வீரன், ஊர்த்தலைவன், அரசன், என யாராக இருந்தாலும் அவனின் பெயர், ஊர், நாடு,ஆட்சியாண்டு, போர் பற்றி நடுகல்லில் இடம் பெற்றது. பொதுவாக நடுகல்எடுத்தவர்கள் பூசலில் இறந்தவனின் இரத்த வழி உறவினராகவே இருப்பர். வீரன்இறந்த பின் அவனின் பெயரை புகழ் வரிகளோடு வடித்து வைப்பர்.இதனை

**“அணிமயிற் பீலிசூட்டிப் பெயர் பொறித்து**

**இனி நட்டனரே கல்லும்”**

என்கிறது புறநானூறு.

இவ்வாறு சங்க காலத்தில் எடுக்கப்பட்ட நடுகற்கள் பெரிதாகவும், தத்ரூபமாகவும்அமைந்தன. வேட்டையின் போது இறந்துபட்ட வீரனுக்கு எடுக்கப்பட்ட நடுகல்லைப்பார்த்து யானை ஒன்று தன்னைத் தாக்க வரும் மனிதன் என அதனை நினைத்துதன் காலால் எட்டி உதைக்கிறது. நடுக்கல்லின் வலிமை காரணமாக யானையின்நகம் உடைந்தது என்பதை பின்வருமாறு அகநானூறு பதிவு செய்கிறது.

**புன்கண் மாலை**

**அர்த்தம் நடுகல் ஆலென உதைத்த**

**தான யானை கதுவாய் வள்ளுகிர்**

**இரும்பனை மது கையின் ஓடியும்**

நடுகற்கள் வீரத்தின் அடையாளமாகக் கருதப்படுகிறது. தன்இனக்குழுவின் நன்மைக்காகவும், ஊர்த்தலைவன் அல்லது அரசன் நலம்பெற வேண்டியும், கோயிலிலிருந்து மக்கள் வழிபட வேண்டியும் உயிர்த்தியாகம் செய்துள்ளனர். நவகண்டம், அரிகண்டம், தலைப்பலி,தூங்குதலை உள்ளிட்ட முறைகளில் வீரர்கள் உயிர்ப்பலி நடந்துள்ளதைஇலக்கியங்கள் மற்றும் சிற்பங்கள் வாயிலாக அறியலாம். அவற்றில் நவகண்டம் என்பது உடலில் எட்டு இடங்களில் வெட்டி இறுதியாக தலையை வெட்டிக்கொள்ளுதல் ஆகம். இதற்கு தலைப்பலி என்றும் பெயர். இவ்வாறு வெட்டப்பட்ட தலை கொற்றவைக்கு காணிக்கையாக வழங்கப்பட்டது. இதற்காக வீரனின் குடம்பத்திற்கு பொருள், நிலம் தானமாக வழங்கப்படும். இதற்கு **“உதிரப்படி”**என்று பொருள். இவ்வாறு உயிர்த்தியாகம் செய்தவனின் நினைவாக நடுகல் எடுத்து காவல் தெய்வமாக வணங்கப்படுவது நமது மரபாகும். பாண்டியநாட்டுப் பகுதியில் முக்கியமாக வழிபடப்பட்ட தெய்வம் கொற்றவை ஆகம். கொற்றவைக்கு குருதி காணிக்கை செலுத்துவது முக்கிய மரபாக பின்பற்றப்பட்டு வந்துள்ளதை இதன் மூலம் அறியலாம். தொல்காப்பியமும் கொற்றவைக் குருதி காணிக்கை செலுத்துவதை

**“கழிப் பேராண்மைக் கடன்”**

என்கிறது. தம் இனக்குழு அல்லது நாட்டுக்காக வீரர்கள் தங்களை அவிப்பலியாக அளித்தனர் என்கிறார் தொல்காப்பியர். நடுகல் எடுக்கும் மரபு தமிழகத்திலிருந்து தோன்றி மற்ற மாநிலங்களுக்கு பரவியது. தமிழகத்தில் தூங்குதலை கொடுத்தல் முறை கர்நாடகாவில் சிடிதல் என அழைக்கப்படுகிறது. சிடிதல் என்றால் குதிக்கும் தலை என்று பொருள்.

தூங்குதலை கொடுத்தல் பற்றி மணிமேகலை

**“தலைதூங்கு நெடுமரத் தாழ்ந்து**

**புறஞ்சுற்றில்**

**பீடிகை யோங்கிய பெரும் பலி முன்றில்”**

**என்று கூறுகிறது.**

தூங்குதலை கொடுத்தவர்களின் நினைவாகவும் நடுகல்எடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் தெளிவாகிறது. இன்று ஆகம விதிப்படி கோவில்கள்கட்டப்படுவது போல சங்க கால நடுகல் வழிபாட்டிற்கும் சில மரபுகள்பின்பற்றப்பட்டுள்ளன. தொல்காப்பியம் நடுகல் எடுப்பதில் ஆறு நிலைகள்பின்பற்றப்பட்டதாக அவை தெரிவிக்கின்றது. காட்சி (கல் தேர்வு), கால்கோள்(நடுகல் எடுப்பிக்க நல்ல நாள், நல்ல நேரம் குறித்தல்), நீர்ப்படை (கல்லைநீராட்டுதல்), நடுகல் பெரும்படை (வீரனின் பெருமை புகழ் வரிகள் எழுதுதல்),வாழ்த்துதல் (உறவினர்கள் கூடி உணவு படைத்து வழிபடுதல்). தமிழகத்தின்பெரும்பாலான பகுதிகளில் நடுகல் வழிபாட்டு

முறை இருந்துள்ளது. பாண்டியநாடுமற்றும் தொண்டை மண்டலப் பகுதிகளில் அதிகமான நடுகற்கள் கிடைக்கின்றன.இவ்வாறு கிடைத்த பல நடுகற்களில் மேற்பகுதி உடைந்து காணப்படுகிறது.ஏனெனில் இது இறந்தவர்களுக்கு எடுக்கப்படும் நடுகல் என்பதால்கல்லின்மேற்பகுதியில் சிறிது உடைத்துவிடும் வழக்கம் காலம் காலமாக இருந்துள்ளதுஎன்கிறார் ஆய்வறிஞர் பூங்குன்றன்.

**நடுகல் வழிபாடும் நம்பிக்கையும்:**

சங்க காலத்திலிருந்தே பாண்டிய நாட்டில் நடுகல் வழிபாட்டு முறைஇருந்துள்ளமைக்கு ஏராளமான இலக்கியச் சான்றுகள் உள்ளன. ஆநிரைப் போரில்ஈடுபட்டு உயிர் நீத்த வீரனின் நினைவாகவே நடுகல் (நினைவுக்கல்) எடுக்கப்படும்முறை இருந்தது. பின்னாளில் ஊர், அரசன், நாடு மற்றும் மக்கள் வளம் பெறவும்உயிர்த்தியாகம் செய்யும் முறை தோன்றியது. இவ்வாறு உயிர்ப்பலிவழங்கியோர்கள் கொற்றவைக்கு தங்களைப் பலியிட்டுக் கொண்டனர். அத்தகையநிகழ்வு பெரும் வீர நிகழ்வாக கருதப்பட்டது.

அச்செயலை கலிங்கத்துப்பரணி பின்வருமாறு விவரிக்கிறது.

**“அடிக் கழுத்தின் நெடுஞ்சிரத்தை அரிவாராலோ**

**அரிந்த சிரம் அணங்கின் கை கொடுப்பராலோ**

**கொடுத்த சிரம் கொற்றவையைப் பரவுமாலோ**

**குறையுடலுங் கும்பிட்டு நிற்குமாலோ”**

கொற்றவைக்கு தலையை காணிக்கையாக தந்த பின் தலையற்ற உடல்கொற்றவையை வணங்கியபடி நிற்கும் என்கிறது கலிங்கத்துப்பரணி. எனவே நாடு,மக்கள், அரசன், சிறக்க நோய் நீங்கி மக்கள் நலம் பெற கொற்றவைக்கு வீரன்தன்னைத்தானே பலியிட்டுக் கொள்ளுதல் பாண்டிய நாட்டுப் பகுதி உட்படதமிழகத்தில் இருந்துள்ளது. இன்று தமிழகத்தில் சிறுதெய்வ வழிபாட்டில் நிகழும்உயிர்ப்பலி சடங்கு நடுகல் வழிபாட்டின் எச்சமாகும். நடுகல் நட்டபின் அதற்குஉயிர்ப்பலியும் கள்ளும் படைத்து வழிபட்டனர். சங்க காலத்தில் துருப்பலி எனஅழைக்கப்பட்ட செம்மறி ஆடு பலியிடப்பட்டது. பொதுவாக பலியிடப்பட்டதன்நோக்கம் அவ்வுயிரினம் (கால்நடை) பல்கிப் பெருக வேண்டும் என்றநம்பிக்கையாகும். எனவே சங்க கால மக்கள் ஆடு வெட்டி நடுகல் தெய்வத்திற்குஅந்த ரத்தத்தைப் படைத்தால் ஆட்டு வளம் பெரும் என்று நம்பினர். நடுகல்வழிபாட்டில் கள் படைக்கப்படுவதன் நோக்கம் இறந்த வீரன் விரும்பி உண்ணும்உணவு என்பதால் தான் இன்னும் இப்பழக்கம் வழக்கில் உள்ளது. இது மூத்தோர்வழிபாட்டின் எச்சமாகும். இதன் மூலம் நடுகல் வழிபாடு வளமை வழிபாட்டுச்சின்னமாக கருதப்படுகிறது. நடுகல் வழிபாட்டு நம்பிக்கைச் சடங்குகள் அனைத்தும்வளமை சின்னத்தின் குறியீடுகளாகவே உள்ளது.

கி.பி. 9ம் நூற்றாண்டு வரையிலான நடுகற்களில் சொர்க்கம் சம்பந்தப்பட்டகாட்சிகள் இல்லை. இதன்மூலம் அக்கால மக்களிடம் சொர்க்கம் நரகம் பற்றிய நம்பிக்கை இல்லை யெனலாம். ஆனால் 12ம் மற்றும் 13ம் நூற்றாண்டுக்குப் பின்புஇடம் பெற்றுள்ள குறிப்பாக நாயக்கர் கால நடுகற்களில் சொர்க்கம் குறித்தநம்பிக்கைகள் காணப்படுகிறது. குறிப்பாக நாயக்கர் ஆட்சி காலத்திய முஷ்டக்குறிச்சி கமுதி தாலுகா ராமநாதபுரம் மாவட்டம், உயர்குடிப் பெண் சதிகல்,வேளாம்பூர் பேரையூர் வட்டம், மதுரை மாவட்டம், போர் வீரன் நடுகல் அருப்புக்கோட்டை மாலையம்மன் நடுகல் உள்ளிட்ட நடுகற்களில் வீரமரணம் அடைந்த வீரர்களை தேவலோக மகளிர் பல்லக்கு அல்லது குதிரையில் வைத்து அழைத்துச் செல்லும் காட்சியை வடித்துள்ளனர். இவ்வாறான காட்சிகள் அடுக்கு

நிலைக் கல்வெட்டுகளில் காணப்படும். திண்டுக்கல் மாவட்டம் அம்பாத்துறையில் பேராசிரியர் இலட்சுமணமூர்த்தி இவ்வாறான அடுக்கு நிலைக் சிற்பங்களை கண்டறிந்துள்ளார். குழந்தைப் பிறப்பு, திருமணம் உள்ளிட்ட சடங்குகளை ஆண்டுதோறும் செய்யும் பழக்கமில்லை. ஆனால் இறந்த முன்னோர்களுக்கு உயிர்ப்பலி அளிக்கும் சடங்கு ஆண்டுதோறும் முக்கிய வழிபாடாக மக்களால் நடத்தப்படுகிறது. பழங்காலத்திய நடுகல் வழிபாடு இன்று பல்வேறு பெயர்களில் நடைபெறுகிறது. தேனி மாவட்டம் ஆண்டிபட்டி தாலுகா நரியூத்து கிராமத்தில் யானையுடன் போரிட்டு இறந்த வீரனின் நினைவாக ஒரு நடுகல் எடுக்கப்பட்டுள்ளது. அதில் வீரனும் அவன் மனைவி இடம் பெற்றுள்ளார். கணவன் இறந்த பின் மனைவிஉடன்கட்டை ஏறியுள்ளார். அப்பெண்ணை மஞ்சனப் பேச்சியம்மன் என்ற பெயரில்அப்பகுதி மக்கள் வழிபட்டு வருகின்றனர். இது தமிழர் பத்தினி வழிபாட்டின்எச்சமாகும். இதே போல பெரியகுளம் வட்டம் வடுகபட்டி கிராமத்தில் உள்ளகுதிரை வீரன் நடுகல்லை விருமாண்டி என்ற காவல் தெய்வமாக வழிபடுகின்றனர்.மதுரை மாவட்டம் தே. கல்லுப்பட்டி அருகே முத்துலாபுரம் கிராமத்தில் உள்ளநடைவீரன் நடுகல்லை கருப்பசாமி என்றும் ஊர்க் காவல் தெய்வமாகவழிபடுகின்றனர். மேற்சொன்ன அனைத்து வழிபாட்டு முறைகளிலும் உதிரப்பலிசடங்கு நடைபெறுகிறது. நடுகல் வழிபாட்டில் ஆக விதிகள் பின்பற்றப்படாதுமேலும்பெரும்பாலான நடுகற்கள் தனியாகவே கோவில் போன்ற கட்டுமானமின்றிகாணப்படுகின்றன. வழிபாட்டுக்கென்று ஒரு சில நாட்களைத் தேர்வுசெய்துஅப்பகுதி மக்களோ அல்லது அந்த நடுகல்லை தெய்வமாக வழிபடும் வம்சாவழியினரோ பூசை செய்கின்றனர். தேங்காய், பழம், பூ, பன்னீர், மது, இறைச்சிஉள்ளிட்டவை பிரதானப் படையல் பொருட்களாக இடம் பெறுகிறது. சில பெண்தெய்வ நடுகல் வழிபாட்டில் மது இறைச்சி இடம் பெறுவதில்லை. எடுத்துக்காட்டாகதேனி மாவட்டம் போடி மீனாட்சிபுரத்தில் உள்ள மாலையம்மன் மற்றும்அருப்புக்கோட்டை மாலையம்மன் வழிபாட்டைக் கூறலாம். சங்க காலத்தில்தொடங்கிய நடுகல் வழிபாட்டு மரபு அதன் இரண்டாயிரம் காலத்திய நம்பிக்கையைஅப்படியே இன்றும் தன்னகத்தே கொண்டுள்ளது. பாமர மக்களின் பல்வேறுவேண்டுதல்கள் அது சார்ந்த நம்பிக்கைகள் உள்ளிட்டவைகள் இன்றும் நடுகல்வழிபாட்டில் இடம்பெறுகிறது.

**முடிவுரை:**

நடுகல் வழிபாட்டு மரபு தமிழகத்தில் தோன்றி பின்னர் மற்ற பகுதிகளுக்கும்பரவியுள்ளது என்பது இன்றைய ஆய்வாளர்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.நடுகற்களின் மூலம் நாடு, ஆட்சியாண்டு, அரசன், மக்கள், சமூகம் ஆகியவற்றைநாம் அறிந்து கொள்ளலாம். இருப்பினும் பண்டைக்கால மக்களின் சமயம்வழிபாடுகள் மற்றும் சடங்குகளைப் பற்றி ஆராய்ந்து அறிவதற்கு நடுகற்கள்பெருமளவில் துணை புரிகின்றன. நடுகல் வழிபாடு பற்றி பல்வேறு குறிப்புகள் சங்கஇலக்கியங்களில் இருப்பினும் சிற்பங்களின் அமைப்பு அக்காலத்தில் இருந்தநம்பிக்கைகள் பற்றிய தகவல்களைத் தருகிறது. வேடியப்பன், பட்டவன், பெத்தம்மா,மதுரை வீரன், நடை வீரன், ஊரம்மா, உள்ளிட்ட பெயர்கள் நடுகல் வழிபாட்டினைப்பின்பற்றி வழங்கப்பட்டதாகும். எனவே பாண்டிய நாட்டில் நடுகல் வழிபாடு மற்றும்அது தொடர்பான நம்பிக்கைகள் சங்க காலம் தொட்டு இன்று வரை அதீதமாற்றமின்றி தொடர்ந்து வந்துள்ளது.

**பார்வை நூல்கள்:**

[1] நேர்காணல், சங்கர ஆவுடையம்மாள், 80 கத்தாளம்பட்டி.

[2] நேர்காணல், பாலகிருஷ்ணன், 62 கத்தாளம்பட்டி.

[3] நேர்காணல், ஐயரக்காள், 83 கத்தாளம்பட்டி.

[4] நேர்காணல், மங்கையர்க்கரசி, 64 கத்தாளம்பட்டி.

[5] ஊ.மு. மாணிக்கவாசகம் என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள், நர்மதா பதிப்பகம்,சென்னை, 2009.

[6] கே.எஸ். சுப்பையா, நோய் தீர்க்கும் மருந்துகள், நலம் பதிப்பகம், சென்னை,2009.